# திருமுறைப் பாடல்கள்




தொகுப்பு : மூ.சிவலிங்கம்

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்



தொகுப்பு : மூ.சிவலிங்கம்

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்


யூன், 2012

விலை 180/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தஞ்சைப்
பெருங்கோயில்,
(தஞ்சாவூர்)



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சிவபூமியாகிய எம்மண்ணின் பெருமையை இறையருளும் சிவநெறியும் தமிழ்மரபும் இறையுணர்வும், சைவப் பண்பும் துலங்க வைத்துள்ளன. இக்கலியுக காலத்தில் ஏற்படும் பற்பல இன்னல்களையும் எம்மால் போற்றி மதிக்கப்படும் தெய்வீக சக்தி பெருங்கருணையுடன் நீக்கி எம்மை உய்விக்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் சைவசமயம் வேறு சமயங் களினால் நலிவுற்றபோது இறைவன் சமய குரவர்களையும் அருளாளர் களையும் தோற்றுவித்து அவர்களைத் தடுத்தாட்கொண்டு சைவசமயம் வளர மக்களை நெறிப்படுத்தவும் இறைவனைப் பாடலினால் அர்ச்சித்து உய்யவும் வகை செய்தார். சமயகுரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் இறைவனின் ஆணைப்படி பல்லாயிரம் பாடல்களைப் பாடினர். இப்பாடல்களிற் சிதைவுற்றன போக எஞ்சிய பாடல்கள் தமிழ்வேதம் என்னும் பெருமையுடன் திருமுறை களாக வகுக்கப்பட்டு ஏற்ற அடைவினையும் வகுத்து எமக்களித் துள்ளனர்.

இவ்வரிய பாடல்களை அன்றுதொட்டே எம் மதத்தினர் ஆவலுடன் பாடி இறையின்பம் பெற்றனர். இச்சிறப்பான பாடல்களுடன் மேலும் பல அருளாளர்களின் பாடல்களையும் ஒன்றுசேர பன்னிரு திருமுறைகளாக வகுத்துள்ளனர். சிவநெறி போற்றும் எம் மக்கள் அன்று தொட்டே வாழையடி வாழையாக இத்திருமுறைகளை ஓதி மன அமைதி பெறுகின்றனர். எமது சமயநெறி சிறப்புடன் மலர யாவரும் இப்பாடல் களை நன்கு கற்று ஓத வேண்டும் என்னும் நோக்கில் சைவ சமய ஆர்வலர்களும் அரசின் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் அரும்பாடுபடுகின்றனர். மாணவர் சமூகம் கற்றறியும் வண்ணம் இலகுவான சிறந்த பாடல்களைத் தொகுத்து வெளியிடும் பணியைப் பலபேரின் வேண்டுதல்களுக்கேற்ப எமது இணுவில் சைவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிக்கழகம் ஏற்றுள்ளது. இப்பணியை நிறைவேற்றும் என் பணியாக பன்னிரு திருமுறைகளிலும் ஒரு சில பாடல்களைத் தெரிவு செய்தேன். இவற்றுடன் இணைப்பாக விநாயகர் அகவல், சகலகலா வல்லி மாலை, கனகதாராதோத்திரம், திருப்புகழ், கந்தரநுபூதி ஆகிய பாடல்களையும் சேர்த்துள்ளேன். சமய வகுப்பு மாணவர்களுக்கு மிக உறுதுணையாகவே இத்தொகுப்பு அமைந்துள்ளது.

என்னை இப்பணியில் இயங்க வைத்த எமதூர் சிவகாமி அம்பாளுக்கு இவை சமர்ப்பணம்.

எமது இத்தொகுப்பில் வழமையான பாடல்களுடன் மகாலட்சுமிக் குரிய "கனகதாராதோத்திரத்தையும் சேர்க்குமாறு பல அன்பர்கள் கேட்டிருந்தனர். இக்கனகதாரா தோத்திரப் பாடல்கள் இருபத்தொன்றும் வடமொழியில் இருந்ததால் அதனை எம்மொழியில் அறிய விரிவான கருத்துக்களையும் தந்துதவிய பிரம்மஸ்ரீ.ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) ஐயா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வரிய தொகுப்பு நூலில் வெளிவரும் பாடல்கள் யாவரும் இலகுவில் மனனம் பண்ணிச் சமயநெறி போற்றி இன்புற இறையருளை வேண்டுகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**என்றும் அறப்பணியில்**
**மூ.சிவலிங்கம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## விநாயகர் துதி



01. அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம்போம் நல்ல
குணமதிகமாம் அருணை கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக்கால்

## சமயகுரவர் துதி

02. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

## சைவ சமயகுரவர் திருநட்சத்திரம்

03. சித்திரைச் சதயம் அப்பர், சிறந்தவை காசிமூலம்
அந்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர், முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாம் சோதிநாளில் சுந்தரர் கயிலைசேர்ந்தார்.

## சைவசமய குரவர் வயது

04. அப்பருக்குக் கெண்பதொன்று அருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டினில் தெய்வீகம் இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்கு
அந்தம் பதினா றறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் பாடலின் அற்புதம்



1. புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே

## அப்பர் சுவாமிகளின் பாடலின் அற்புதம்



2. தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் நீறு தடாகம தாகுமே
கொலை செய் ஆனை குனிந்து பணியுமே
கோளராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர் பாடலின் அற்புதம்



3. வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்கல் லானது தங்கம தாக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

## திருவாதவூரர் பாடலின் அற்புதம்



4. பெருகும் வையை தனை அழைப் பிக்குமே
பிரம்படிக்குப் பிரான் மேனி கன்றுமே
நரியை வான்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பே சுவிக்குமே
பரிவிற் பிட்டுக்குமண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோ வைபாடுமே
வருகம் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிருதிருமுறைகள் பற்றிய தகவல்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரவு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் இறைவனின் திருவுளப் படியே தடுத்தாட்கொள்ளப்பட்டனர். இறைவனின் பணிப்பின் பேரிலும் வழிகாட்டலிலும் நெறிப்பட்டு பல்லாயிரக்கணக்கான தேவாரங்களைப் பாடினர். இப்பாடல்கள் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் யாவும் ஆடல் பிரானின் திருவுளப்படி தில்லை நடராசப் பெருமானின் ஆலயம் அமைந்த கனகசபையில் ஓர் அறையில் பாதுகாப்பாக வைத்து வேதாகமங்களினாற் பூட்டப்பெற்றது. இவ்வேடுகளைப் பாடியவர்களே வந்து பெற்றுக் கொள்ளட்டும் என்ற நியதியும் இருந்தது.

பல காலங்களின் பின் நம்பியாண்டார் நம்பியின் சிறப்பினையறிந்த இராஜராஜசோழன் அவர்மூலம் தில்லையிலே வைத்துப் பூட்டப்பட்ட ஏடுகளை எடுத்து சைவசமயத்தவர்களுக்கு பயன்பெறும் வகையில் செப்பேடுகளில் பதிப்பிக்க எண்ணினான். மன்னனும், நம்பியும் சிதம்பரஞ் சென்று நடராசப் பெருமானை வணங்கி சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் திருவுருவப் படங்களை எழுந்தருளச் செய்து இறைவனை வேண்டிப் பாடியதும் திருக்கதவு திறபட்டது. உள்ளே சென்ற நம்பியும் சோழனும் பழுதில்லா ஏடுகளை மட்டும் எடுத்தனர். ஏனையவை கறையானால் அழிக்கப்பட்டிருந்தன. அதனால் இருவரும் வருத்தமடைந்தபோது “இக்காலத்துக்கு தேவையானவற்றை விடுத்து ஏனையவற்றினைக் கறையான் புற்று மண்ணினால் மூடச் செய்தோம்” என இறைவன் அசரீரியாகத் தெரிவித்தார். இறையருளினாற் கிடைத்த ஏடுகளை எடுத்த நம்பியாண்டார் நம்பி இராஜராஜசோழனின் பேருதவியுடன் இறைவனால் மீண்டும் தெரிவிக்கப்பட்டபடி ஏற்ற பண் அடைவுகளுடன் நிரலிட்டுச் செப்பேடுகளிற் பதிப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பி இறைவனின் வழிகாட்டலினால் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரினாற் பாடி அருளப்பெற்ற 384 பதிகங்களைக் கொண்ட 4159 பாடல்களையும் முதலாம் இரண்டாம் மூன்றாம் திருமுறைகளாக வகுத்துள்ளார். இந்த மூன்று திருமுறைகளும் **"திருக்கடைக்காப்பு"** எனும் பெயரில் வழங்கி வருகிறது. திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய 313 பதிகங்களைக் கொண்ட 3045 பாடல்களும் முறையே நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக வகுக்கப் பெற்றன. இம்மூன்று திருமுறைகளும் **"தேவாரம்"** என்னும் பெயருடன் வழங்கி வருகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய நூறு பதிகங்களைக் கொண்ட 1026 பாடல்களும் **"திருப்பாட்டு"** என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் யாவும் ஏழாந்திருமுறையாக வகுக்கப் பெற்றுள்ளது.

மேற்கூறப்பட்ட ஏழு திருமுறைகளும் தமிழ்மறையாம் சிறப்புடன் தேவாரப் பதிகங்களாகக் கணிக்கப் பெற்றுள்ளன. தேவார முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவநெறியை உய்விக்கவென அவதரித்தவர்களாவர். இத்தேவாரப் பதிகங்கள் யாவும் பல அற்புதங்களையும் சிவநெறிக்கான சமய தத்துவங்களையும் இலகு முறையில் விளங்கவைக்கும் பெருமைக் குரியனவாகும்.

பதினாறு வயதெல்லையுடன் அவதரித்த பிள்ளை தந்தையுடன் ஆலயஞ் சென்றார். நீராடிய தந்தையைக் காணாது அழுத பிள்ளைக்கு பாலைக்கொடுத்து ஞான உணர்வூட்டிய இறைவன் மழலைப்பருவத்திலிருந்தே பாடவைத்தார். பாலைக் கொடுத்து ஞானத்தைச் சம்பந்தப்படுத்தி ஆட்கொண்டதால் இப்பாலகன் திருஞானசம்பந்தர் எனப் பெயர்பெற்றார்.

மருணீச்சியார் என்னும் பெயருடன் சிவநெறி போற்றும் சைவமரபிற் பிறந்து நெடுங்காலமாகவே சமண மதத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்து சைவசமயத்தை மறந்ததால் அவரைத் தடுத்தாட் கொள்வதற்குச் "சூலை கொடுத்து" (சூலை நோய்) சிவநெறியில் அரும்பணியாற்ற இறைவன் திருவுளங் கொண்டார். நோயின் வெம்மையால் தம்மை மறந்து இறைவனை வேண்டித் தமது நாவன்மையால் பாடிய சிறப்பை மெச்சிய இறைவன் "**நாவுக்கரசு**" எனப் பாராட்டினார்.

சிவபுரத்தில் பெண்ணாசையால் மயங்கிய ஆலாலசுந்தரரை இறைவன் பூமியில் அவதரிக்கவும் உரிய நேரத்தில் தாம் தடுத்தாட் கொள்வதாகவும் தெரிவித்தபடி ஆலாசுந்தரரை திருமண மண்டபத்தில் (அடிமையென்றும்) ஓலை கொடுத்துத் தடுத்தாட் கொண்டார். ஞான உணர்வு பெற்ற சுந்தரரைப் பாடும் வண்ணம் பித்தன் என்னும் அடிஎடுத்துக் கொடுத்துப் பாடவைத்தார். முறையே பாலைக்கொடுத்துத் திருஞானசம்பந்தரையும் சூலை கொடுத்து அப்பரையும் ஓலை கொடுத்து சுந்தரரையும் தடுத்தாட் கொண்ட இறைவன் மூவரையும் பாடவைத்து சைவசமயம் சிறப்புடன் வளர்ந்தோங்க அருளினார். இறைவனின் பேரருளினால் மூவரது தேவாரப்பாடல்களும் ஏழு திருமுறைகளையும் அலங்கரிக்கின்றன.

திருவாதவூரர் என்னும் பெயருடன் பாண்டிய மன்னனின் முதலமைச்சராக ஏற்றபணி சிறக்கப் பெருநிதியுடன் குதிரை வாங்கச் சென்றவர் தம்மையும் தம்பணியையும் மறந்து குருவடிவில் வந்த இறைவனாற் கவரப்பட்டார். கொண்டு வந்த பணத்தை இறைபணிக்கு ஆக்கி குருவின் திருவடியில் வீழ்ந்ததும் இறைவன் காலைக் கொடுத்து திருவடி தீட்சை வழங்கி ஆட்கொண்டார். இறையருளினால் மாணிக்க மணியான வாசகத்தைப் பாடியதால் இறைவனால் "மாணிக்கவாசகன்" எனப் பெயரிட்டுத் திருவாசகத்தை தொடர்ந்து பாடப் பணிக்கப்பட்டார். இறைவன் மாணிக்கவாசகரின் தேனமுது சொட்டும் இனிய பாடல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கியதால் அவர்பாடிய முழுப் பாடல்களையும் (திருவாசகம், திருக்கோவையர்) தமது பொற் கரங்களால் எழுதினார். எழுதிய பாடல்களின் இறுதியில் "**திருவாதவூரன் பாட அழகிய சிற்றம்பல முடையான் எழுதியவை**" எனக் குறிப்பிட்டிருந்தார். மாணிக்க வாசகப் பெருமானின் திருவாசகம் 656 பாடல்களும் திருச் சிற்றம்பலக்கோவையாரின் நானூறு பாடல்களும் எட்டாவது திருமுறையாக அமைந்து பன்னிரு திருமுறைகளுக்கும் அணிகலனாகத் திகழ்கிறது.

**ஒன்பதாந் திருமுறையை ஒன்பது ஆசிரியர்கள் பாடியுள்ளனர்.**

01. திருமாளிகைத்தேவர்
02. சேந்தனார்
03. கருவூர்த்தேவர்
04. பூந்துருத்திகடாநம்பி
05. கண்டராதித்தர்
06. வேணாட்டடிகள்
07. திருவாலியமுதனார்
08. புருடோத்தமநம்பி
09. சேதிராயர்

இந்த ஒன்பதாந் திருமுறையில் 29 பதிகங்களைக் கொண்ட 303 பாடல்களான திருவிசைப்பாவும், பதின்மூன்று பாடல்களைக் கொண்ட திருப்பல்லாண்டும் அமைந்துள்ளன.

## பத்தாந்திருமுறை

## "திருமந்திரம்"

### திருமூலநாயனார் பாடியருளியது

மந்திரங்கள் 9 பாடல்கள் 3050



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராந்திருமுறை

## 12 ஆசிரியர்கள் பாடியருளியது

01. திருவாலவாயுடையார் (சிவபெருமான்)
02. காரைக்கால் அம்மையார்
03. ஐயடிகள் காடவர்கோன்
04. சேரமான் பெருமான் நாயனார்
05. நக்கீரதேவர்
06. கல்லாட தேவர்
07. கபில தேவர்
08. பரணதேவர்
09. இளம்பெருமானடிகள்
10. அதிராவடிகள்
11. பட்டினத்தடிகள்
12. நம்பியாண்டார் நம்பிகள்

இத்திருமுறையில் 40 பிரபந்தங்கள் 1385 பாடங்கள் அடங்கியுள்ளது.

## பன்னிரண்டாந்திருமுறை

பெரிய புராணம் எனவும் திருத்தொண்டர் புராணம் எனவும் போற்றப்பெறுகிறது. தெய்வச்சேக்கிளார் நாயனார் பாடியருளியது.

காண்டம் 02 சருக்கம் 13 பாடல்கள் 4253

## மொத்தக் குறிப்பு

பன்னிரு திருமுறைகளையும் 27 ஆசிரியப் பெருமக்கள் பாடியருளிய மொத்தப் பாடல்கள் 18290



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த

# தேவாரம்

# முதலாந்திருமுறை

**திருப்பிரமபுரம்** **பண் : நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

**திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்.** **பண் : வினாவுரை நட்டபாடை**

அங்கமும்வேதமு மோதுநாவர் அந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதிமருக னிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

**திருவண்ணாமலை** **பண் : நட்டபாடை**

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரன் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

## இடர்களைப் பதிகம்

**திருநெடுங்களம்** **பண் : பழந்தக்கராகம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பேசி னல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடப் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

நின்அடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்அடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடைஆ ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடும் தலைவன்நின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்திஇராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழஎங்கும் நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் அடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

வெஞ்சொற்றஞ்சொ லாக்கிநின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சமிலாச் சாக்கியரும் தத்துவமென் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.

**திருப்பழனம்** **பண் : தக்கேசி**

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்** **பண் : குறிஞ்சி**

காற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
சொற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

**திருச்சிராப்பள்ளி** **பண் : குறிஞ்சி**

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளெ(று)
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

**திருவலிவலம்** **பண் : வியாழக்குறிஞ்சி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

**திருத்தருமபுரம்** **பண் : யாழ்மூரி**

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின் றிசைபாடவு மாடுவ
ரவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் திருமுறை

**திருமருகல்** **பண் : இந்தளம்**

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே.

**திருப்புள்ளிருக்குவேளூர்** **பண் : சீகாமரம்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

**திருமயிலாப்பூர்** **பண் : சீகாமரம்**

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

**திருவெண்காடு** **பண் : சீகாமரம்**

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

**திருவெண்காடு** **பண் : காந்தாரம்**

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா வென்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்க டுயரங்கள்
அண்டாவண்ண மறுப்பா னெந்தை யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே.

திருச்சிற்றம்பலம்

## திருநீற்றுப்பதிகம்

**திருவாலவாய்** **பண் : காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்ப் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தருவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனியால வாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மாலவாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
　　தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
　　கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
　　லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
　　டஞ்ச நெஞ்சே.

திருச்சிற்றம்பலம்

## கோளறு பதிகம்

பொது பண் : பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
　　மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
　　உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
　　சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
　　அடியா ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலிங்க
　　எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
　　உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
　　உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
　　அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளரி யுழுவை யோடு கொலையாணை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேட மாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே

திருச்சிற்றம்பலம்

**திருவலஞ்சுழி** **பண் : நட்டராகம்**

திருச்சிற்றம்பலம்

எண்ணபுண்ணியஞ் செய்தனைநெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

விருது குன்றாமா மேருவி னாணர
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் சென்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதிரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அணணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரந்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லவர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலிற் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போத்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆட லேறுடை யண்ணல்கே தீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாந்திருமுறை

**திருவாவடுதுறை** **பண் : காந்தாரபஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவென் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நா
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்நா
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படையெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

## திருவைந்தெழுத்துண்மை

**பொது** **பண் : காந்தாரபஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லக்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நகரம் விளைத்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே

வீடுபி றப்பை அறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே.

**திருக்கழுமலம்** **பண் : கொல்லி**

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

**திருவாலவாய்** **பண் : கொல்லி**

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயத் திருப்பதிகம்

பொது பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெல்லாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே.

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரக மேழ்புக நாடின ராயினும்
உ'ரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாமம் நமச்சி வாயவே

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

பொது — **திருப்பாசுரம்** — பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாலவாய்** **பண் : புறநீர்மை**

மங்கையற் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம்

**திருக்கோணமலை** **பண் : புறநீர்மை**

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
பட்ர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லி யளொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்

**திருநல்லூர் பெருமணம்** **பண் : அந்தாளிக்குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாவுக்கரசு நாயனார்
### அருளிச் செய்த
# தேவாரம்
# நான்காந் திருமுறை

**திருவதிகை வீரட்டானம்** **பண் : கொல்லி**

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

**திருவையாறு** **பண் : காந்தாரம்**

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கச்சியேகம்பம்** **பண் : காந்தாரம்**

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாள அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே

திருச்சிற்றம்பலம்

## திருவங்கமாலை

**பொது** **பண் : சாதாரி**

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்

கைகாள் கூப்பிதொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்

உற்றா ராளுளரோ உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்

## நமச்சியவாயத்திருப்பதிகம்

**பொது** **பண் : காந்தார பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பினை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

**திருவாரூர்** **பண் : குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தருனாரூ ராதிரைநாளா லதுவண்ணம்

**திருவொற்றியூர்** **பண் : திருநேரிசை**

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

**பொது** **பண் : தனித்திருநேரிசை**

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

**கோயில்** **பண் : கொல்லி**

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பாதிரிப்புலியூர்** **பண் : திருவிருத்தம்**

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

**திருக்கச்சியேகம்பம்** **பண் : திருவிருத்தம்**

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவெற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

**திருத்தூங்கானைமாடம்** **பண் : திருவிருத்தம்**

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

**பொது** **பண் : தனித்திருவிருத்தம்**

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் திருமுறை

**கோயில்**

**பண் : திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

**கோயில்**

**பண் : திருக்குறுந்தொகை**

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.

**திருமறைக்காடு**

**பண் : திருக்குறுந்தொகை**

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.

**திருக்கடம்பூர்**

**பண் : திருக்குறுந்தொகை**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

**திருச்சேறை**

**பண் : திருக்குறுந்தொகை**

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது பண் : தனிக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே

வாழ்ந்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

பொது பண் : ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாந் திருமுறை

**கோயில்** **பண் : பெரிய திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தந்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருப்பூவணம்** **பண் : திருத்தாண்டகம்**

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

**திருவாரூர்** **பண் : திருத்தாண்டகம்**

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

**திருவாவூர்** **பண் : திருத்தாண்டவம்**

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

**திருவாரூர்** **பண் : போற்றித்திருத்தாண்டகம்**

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் கணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமல திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொது பண் : தனித்திருத்தாண்டகம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

பொது பண் : மறுமாற்றத்திருத்தாண்டகம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்சே வடியிணையே குறுகி னோமே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

# தேவாரம்

# ஏழாந் திருமுறை

**திருவெண்ணெய் நல்லூர்** **பண் : இந்தளம்**

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

**திருக்கோளிலி** **பண் : நட்டராகம்**

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

**திருமழபாடி** **பண் : நட்டராகம்**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகலூர் பண் : கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

ஊர்த்தொகை பண் : பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர ரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.

திருச்சிற்றம்பலம்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருப்பாண்டிக்கொடுமுடி பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிறவா தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயிர் பாடைமேல்
காவு நாள்இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந் திழி காவிரி யதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச னிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித்தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனேஉனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

செம்போ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான் என்பொன் மாமணீயென்று
பேரெ ணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

கோணிய பிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்டறைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரான் சொல்லிவை சொல்லுவார்க்கில்லைதுன்பமே

திருச்சிற்றம்பலம்

**திருக்கடவூர் மயானம்** **பண் : பழம்பஞ்சுரம்**

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

**திருபுன்கூர்** **பண் : தக்கேசி**

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆயிரு ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கச்சியேகம்பம்** **பண் : தக்கேசி**

ஆலந் தானுகந் தமுது செய்தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏலவார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

**திருத்தினைநகர்** **பண் : தக்கேசி**

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

**திருமறைக்காடு** **பண் : காந்தாரம்**

யாழைப்பழித் தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளோடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் நகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

**திருக்கூடலையாற்றூர்** **பண் : புறநீர்மை**

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாரூர்** **பண் : செந்துருத்தி**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

**திருநொடித்தான்மலை (ஸ்ரீ கயிலாயம்)** **பஞ்சமம்**

தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ லாம்வந் தெதிர்ந் திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகள்**

**அருளிச் செய்த**

**திருவாசகம், திருக்கோவையார்**

# திருவாசகம்

# எட்டாந் திருமுறை

## சிவபுராணம்

**திருப்பெருந்துறையில் அருளியது**

(சிவனது அநாதி முறைமையான பழைமை)

**கலிவெண்பா**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி;
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த், தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுவர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே.

திருச்சிற்றம்பலம்

## நீந்தல் விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

## (சக்தியை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
எழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாட செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவார் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவம்மானை

(ஆனந்தக்களிப்பு)

திருச்சிற்றம்பலம்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

திருச்சிற்றம்பலம்

## திருப்பொற்சுண்ணம்

(ஆனந்த மனோலயம்)

### திருத்தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினர்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்

## திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

## திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

## கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

திருச்சிற்றம்பலம்

## அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழைத்தபத்து

நாயிற் கடையாம் நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்
டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன
தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே.

## உயிருண்ணிப்பத்து

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே.

## பிடித்த பத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக்
கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவிசைப்பா

# ஒன்பதாந் திருமுறை

## திருமாளிகைத்தேவர் அருளிச்செய்தது

**கோயில்** **பண் : பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## சேந்தனார் அருளிச்செய்தது

**திருவீழிமிழலை** **பண் : பஞ்சமம்**

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளிச்செய்தது

**கோயில்** **பண் : பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டுகூறுதுமே.

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமூலநாயனார் அருளிய
# திருமந்திரம்
# பத்தாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காறாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பதினோராந் திருமுறை

## திருவாலவாயுடையார் அருளிச்செய்த
## திருமுகப் பாசுரம்

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## காரைக்காலம்மையார் அருளிச்செய்த
## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

**பண் : நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடைஎட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : இந்தளம்

சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே.

காரைக்காலம்மையார் அருளிச்செய்த

## அற்புதத் திருவந்தாதி

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது

நக்கீரதேவ நாயனார் அருளிச்செய்த

## திருமுருகாற்றுப்படை நேரிசை வெண்பா

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

கபிலதேவநாயனார் அருளிச்செய்த

## மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த
## கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேன் அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே

## திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கடவார்பொன் அலர்ந்தகொன்றைத்
தழையார் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே.

### நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த
## கோயில் திருப்பணியார் விருத்தம்

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொலாம்புகல் என்னுள் வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல வாஅலர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் நாயனார்

## அருளிச்செய்த

# பெரிய புராணம்

## என வழங்கும்

## திருத்தொண்டர் புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க" என்றார்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால் என்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகொலாம்.

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாந் திருமுறை முற்றுப்பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு


01. விநாயகர் அகவல்

02. அபிராமி அம்பாள் துதி

03. சரஸ்வதி துதி - சகலகலாவல்லிமாலை


04. கனகதாராதோத்திரம் பாடிய வரலாறும் பாடிய நோக்கமும்

கனகதாரா பாடலும் கருத்துவிளக்கமும்

05. திருப்புகழ்

06. கந்தரநுபூதி

07. திருப்புகழ் - பகளிக்கூத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ அபிராமி அம்பாள் துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்,
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்,
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்,
துய்யநின் பாதத்தில் அன்பும் - உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் நீ அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# குமரகுருபர சுவாமிகள் அருளிய
# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! - 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! - 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! - 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! - 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! - 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
தாயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.! - 08

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! - 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகல கலாவல்லியே! - 10

## சரஸ்வதி அந்தாதி காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

## சரஸ்வதி அந்தாதி காப்பு

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளத்தாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் (வெள்ளை

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்

**- பாரதியார்**

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்

**– காளமேகப்புலவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகதாரா தோத்திரம்

## பாடியவரின் வரலாறும் பாடிய நோக்கமும்

தென்னிந்திய மாநிலமான கேரளாவில் காலடி என்னும் அழகிய புண்ணிய கிராமம் பல வளங்களும் சீரும் சிறப்பும் மிகுந்த திருவூராகும். ஏறக்குறைய ஆயிரமாண்டுகளுக்கு முன் அங்கு வாழ்ந்த சிவகுருவும் அவர்தம் தர்மபத்தினி ஆரியம்பாவும் இல்லறம் நாடி நல்லறம் காத்து, சிவனடியார்களை ஆதரித்து பகுத்துண்டு வாழ்ந்தனர். சிவகுரு என்பவர் சிறந்த வேத விற்பன்னரும் கல்விமானும் ஆவார். இத்தம்பதியினரின் நல்லறப் பணிக்கேற்ப இல்லற வாழ்வின் குறையாக இருந்த மழலைச் செல்வத்தை அயலூரிலுள்ள சந்திரமௌலீசர் நிறைவு செய்தார். பெற்றோர் தமது மனம் நிறைந்த சற்புத்திரனுக்குச் சங்கரன் எனப் பெயர் சூட்டி இன்புற்றனர். சங்கரனின் மேனி அழகும், வசீகரமான தோற்றமும், நல்லறிவும், விவேகமும் தாய் தந்தையரின் அக மகிழ்வை உயர்த்தியது.

சங்கரன் தமது மூன்றாம் வயதில் இறை பக்தியுடன் இறையருளாற் பெற்ற நுண்ணறிவால் தந்தையுடன் கதைக்கும் போது வேதாந்தங்களின் தொடர்பான விளக்கத்தையும் கூறி வந்தார். மகனின் அறிவாற்றலைக் கண்டு இன்புற்ற சிவகுரு தமது தவப் புதல்வனைக் குருகுலக் கல்வி பயில இணைத்தார். சங்கரன் தாம் பெற்ற இறையருளினால் குருகுலக் கல்வியின் நீண்ட காலப் பயிற்சியை மிகக்குறுகிய காலத்தில் நிறைவு செய்யவும் பயின்றார். குருகுல வாசத்தின் நியதியாக நாள்தோறும் ஒரு வீட்டில் மட்டும் உணவுப் பொருட்களை யாசகஞ் செய்து வரல் வேண்டும். இந்த நியதிப்படி சங்கரன் தமது ஏழாம் வயதில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தின் முன் நின்று "அம்மா பிச்சையிடுங்கள்" என மூன்று முறை தமது பிஞ்சுக் குரலால் அழைத்தார்.

குறிப்பிட்ட இல்லத்துக்குரியவரான வேதியர் சோமதேவர் என்பவர் தமது வறுமை காரணமாக அயலூருக்குப் பிச்சை எடுக்கப் போயிருந்தார். அவரின் துணைவியாரான தருமசீலை என்பவர் வீட்டு வாசலில் நின்று அழைத்த குரலுக்காக வெளியே வந்தார். தமருசீலை வாசலில் நின்ற சங்கரனைக் கண்டதும் திகைத்தார். சிவபிரானே நேரில் வந்து யாசிக்கிறாரோ என்னும் ஐயம் எழுந்தது. ஏழு வயதுடைய இளம் துறவியாக நிற்கிறாரே ஏது செய்வேன் எனத் தடுமாறுகிறாள்.

தருமசீலையின் தவிப்பைக் கண்ட சங்கரர் புன்னகை யுடன் "தாயே நாள் ஒன்றுக்கு ஒரேயொரு இல்லத்தில் மட்டும் யாசகம் பெற வேண்டுமென்பது எங்கள் குருநாதரின் கட்டளை யாகும். எனவே தங்கள் இல்லத்திலுள்ள எதுவானாலும் அதைத் தந்தால் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். சங்கரரின் பணிவான வேண்டுதலின்படி கொடுக்கவும் இயலாது மறுக்கவும் இயலாத தருமசீலை வீட்டினுட் சென்று ஊறுகாய் வைத்திருக்கும் கல்சட்டியிலிருந்த ஒரேயொரு காய்ந்த நெல்லிக்காயை எடுத்து வந்தாள். அதனைப் பணிவுடன் சங்கரரின் யாசக பாத்திரத்தில் பய பக்தியுடன் இட்டாள். தமது இல்லத்தின் வறுமை நிலையைக் கூறி மன்னிக்குமாறு வேண்டினாள். தருமசீலையின் மன நிலையைக் கண்ட இளந்துறவியின் கருணை உள்ளம் கண்ணீர் மல்க வைத்தது.

இப்பரிதாப நிலையையுணர்ந்ததும் சங்கரர் அவ் விடத்திலிருந்தே மகாலட்சுமியை வேண்டிக் "கனகதாரா" என்னும் இருபத்தொரு சுலோகங்களைப் பாடினார். பாடலின் நிறைவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மகாலட்சுமி நேரிற்தோன்றி "சங்கரா இத்தம்பதியினர் முற் பிறவியில் குசேலர் தம்பதியாக இருந்தனர். எனது கணவரால் செல்வந்த நிலையை அடைந்ததும் அறத்தையும் தமது நியமத்துக் கேற்ற பணியையும் மறந்து செல்வச் செருக்கில் இன்புற்றனர். இதனால் இவர்களின் செல்வநிலை மாறியது. அதன் பயனாகவே இன்று இவர்களுக்கு இவ்வறுமை நிலை ஏற்பட்டது. இப்போது உனது வேண்டுதலினால் இவர்களின் வறுமை நீங்குகிறது" என்று கூறியருளியதும் தங்க நெல்லிக் காய்கள் இவர்களின் இல்லத்தில் சொரிந்தன.

அன்று அவ்வில்லம் தங்கத்தின் விளைநிலமான மாளிகை யாகவே காணப்பட்டது. அன்று முதல் இவ்வில்லத்தில் எத்தனை அதிதிகள் எந்த நேரம் வந்தாலும் அவர்களை உபசரித்து உணவளிக்கும் தருமசாலையாகவே இயங்குகின்றது. காலடி என்னும் திருவூரில் சோமதேவரின் இல்லம் அவரது பரம்பரையின ரால் இன்றுவரை அன்னதானம் வழங்கும் அறச்சாலையாக நன்கு அரும்பணியாற்றுகிறது.

"கனகதாரா" சுலோகங்களைக் கூறி மகாலட்சுமியை உள்ளன்போடு வழிபட்டால் வறுமை நீங்கும். வாழ்வு வளம் பெறும். நாள்தோறும் அல்லது வெள்ளிக்கிழமை தோறும் "கனகதாரா" சுலோகங்களைக் கூறி வழிபட்டால் குடும்பத்தின் வறுமை நீங்கும். இல்லம் வளம் பெருகும். நோய் நொடிகள் நீங்கும் உடல் நலம் பெருகும். மிகு செல்வமும் செல்வாக்கும் மேலோங்கும்.

"கனகதாரா" சுலோகங்கள் ஆதிசங்கரரால் வடமொழியில் ஓதப்பெற்றன. அவற்றின் கருத்தினை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி சங்கரர் அருளிய பொன்மழைப் பாடல்
# ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம்

அங்கம் ஹரே: புலகபூஷண மாச்’ மரயந்தீ
ப்ருங்காங்கநேவ முகுளாபரணம் தமாலம் |
அங்கீக்ருதாகில விபூதி ரபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கள தேவதாயா: ||

பரந்து கிடக்கும் வாவியிலே தாமரை வளையங்கள் சுருண்டு கிடக்கின்றன. மேலே தாமரையிலைகள் படர்ந்து பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கின்றது. ஆங்காங்கே மலர்கள் கண்களைப் போற் காணப்படுகின்றன. மாலையானதும் அவை கூம்பி முகுளங்கள் (மொட்டுகள்) ஆகின்றன. பகலெல்லாம் தேனுண்டு மயங்கிய வண்டுகள் இலைகளிலும் மலர்களிலும் உறங்கிக் கிடக்கின்றன. அவை அதிகாலையில் விழித்தெழுந்து முகுளங்களைச் சுற்றிச் சுழன்று பூபாளம் இசைக்கின்றன. மொட்டுக்கள் மெல்ல மெல்லக் கண் விழித்து மலர்கின்றன. வண்டுகளுக்குப் பரிசாகத் தேனும் மகரந்தப் பொடிகளும் கிடைக்கிறது. அவற்றையுண்டுகளித்த வண்டுகள் - இனபந்துக்களுக்கும் எடுத்துச் செல்கின்றன. மீதியை விருந்தினர்க்காய்சேமித்து வைக்கின்றன. இதுபோன்ற அழகிய காட்சி பாற்கடலிலும் நிகழ்கிறது.

பரந்து கிடக்கும் நீலக் கடலிலே சுருண்டு கிடக்கும் பாம்பணையின் மேல் “பச்சைமா மலைபோல் மேனிப் பவளமாய் கமலச் செங்கண் அச்சுதன்” அறிதுயில் கொள்கிறார். அவர் கண்கள் - கரங்கள் - பாதங்கள் என்பன சிவந்த தாமரைப் பூக்கள் போல் காட்சியளிக்கின்றன. அவர் மார்பிற் பள்ளி கொள்ளும் திருமகளின் விழிகளாகிய அழகிய வண்டுகள் எம்பெருமானின் முக மலரைநாடிச் சுற்றிச் சுழன்று வட்டமிடுகின்றன. அவர் விழித்திருக்கும்போது நேருக்கு நேர் பார்த்து மகிழ்வதற்கு நாணம் குறுக்கீடு செய்கிறது. அறிதுயில் புரியும் மாயனை அங்கம் அங்கமாகப் பார்த்து ரசிக்கிறார். அண்ணல் அறிதுயில் புரிந்தாலும் எல்லாம் அறியும் யோக நித்திரையல்லவா செய்கிறார். அன்னையின் செயல்கள் அவர் உள்ளத்தைக் கிளர்ச்சியுறச் செய்கின்றன. மகிழ்ச்சி பொங்கிப் பெருக்கெடுக்கிறது. அவர் உள்ளம் மலர்ந்து பொலிகிறது. அங்கமெல்லாம் மயிர்க்கூச்சுற்றுப் புளங்காகிதம் அடைகிறார். அது கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையும் பரவசம் அடைகிறார். அன்னைக்குப் பெருமாற்றம் பரிசாகக் கிடைக்கிறது. தன்சுற்றத்தவராகிய அடியார்களுக்குப் பொன்னும், மணியும் வாரிவாரி வழங்குகிறார். அவர்கள் சகல மங்களங்களும் வாய்க்கப் பெற்று பந்துமித்திரர்க்கும் - விருந்தினர்க்குங் கொடுத்து மகிழ்ந்து பெருவாழ்வு வாழ்கிறார்கள். இப்பாடலில் உள்ள உவமை நயம் எமக்குப் பெரு விருந்தாகிறது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"

(திருக்குறள் 5: 10)

முக்தா முஹு"ர்விதததீ வதநே முராரே:
ப்ரேம த்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி |
மாதா த்ருசோ'ர் மதுகரீவ மஹோத்பலேயா
ஸா மே ச்'ரியம் திச'து ஸாகரஸம்பவாயா: ||

நீர்ப்பூக்களிலே குவளை முதலியவை நீல மலர்கள். இவை நீலமணி போன்றவை வாவியிலே நீலமலர்களை நாடி வண்டினங்கள் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடுகின்றன; பின் மலர்களைக் கிளறித் தேனை ஆராய்ந்து பருகிக் களி கொள்கின்றன. பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமனின் நீலமுக மலரை நாடித் திருமகளின் மலர்ந்த விழி வண்டுகள் சுற்றிச் சுழல்கின்றன. நாணம் குறுக்கிடுகிறது. பார்வை தாழ்கிறது. ஆவல் உந்துகிறது. மீண்டும் விழிகள் மணிவண்ணன் வதனத்தை நாடிச்செல்கின்றன. இவ்வாறு நாணமும் ஆவலும் போட்டியிடுகின்றன. வெற்றி ஆவலுக்குத்தான். அன்னையின் உள்ளம் பூரிக்கிறது. மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது.

அழகிய பாற்கடலில் உதித்த அன்னையே! நின்னை எந்நேரமும் நினைந்து வழிபடும் நின்னடியான்மேலும் உனது பார்வை கிட்டினால் சகல சம்பத்துக்களையும் பெற்றுப் பிறவிப்பயனாகக் கருதும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் பெற்று ஈடேற்றம் பெற்றவனாவேன்.

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்"

வள்ளுவர் காட்டும் பெண்மைக் குணம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிவாரி வழங்குகிறார். அவர்கள் சகல மங்களங்களும் வாய்க்கப் பெற்று பந்துமித்திரர்க்கும் - விருந்தினர்க்குங் கொடுத்து மகிழ்ந்து பெருவாழ்வு வாழ்கிறார்கள். இப்பாடலில் உள்ள உவமை நயம் எமக்குப் பெரு விருந்தாகிறது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"
(திருக்குறள் 5: 10)

முக்தா முஹுர்விதததீ வதநே முராரே:
ப்ரேம த்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி |
மாதா த்ருசோ'ர் மதுகரீவ மஹோத்பலேயா
ஸா மே ச்'ரியம் திச'து ஸாகரஸம்பவாயா: ||

நீர்ப்பூக்களிலே குவளை முதலியவை நீல மலர்கள். இவை நீலமணி போன்றவை வாவியிலே நீலமலர்களை நாடி வண்டினங்கள் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடுகின்றன; பின் மலர்களைக் கிளறித் தேனை ஆராய்ந்து பருகிக் களி கொள்கின்றன. பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமனின் நீலமுக மலரை நாடித் திருமகளின் மலர்ந்த விழி வண்டுகள் சுற்றிச் சுழல்கின்றன. நாணம் குறுக்கிடுகிறது. பார்வை தாழ்கிறது. ஆவல் உந்துகிறது. மீண்டும் விழிகள் மணிவண்ணன் வதனத்தை நாடிச்செல்கின்றன. இவ்வாறு நாணமும் ஆவலும் போட்டியிடுகின்றன. வெற்றி ஆவலுக்குத்தான். அன்னையின் உள்ளம் பூரிக்கிறது. மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது.

அழகிய பாற்கடலில் உதித்த அன்னையே! நின்னை எந்நேரமும் நினைந்து வழிபடும் நின்னடியான்மேலும் உனது பார்வை கிட்டினால் சகல சம்பத்துக்களையும் பெற்றுப் பிறவிப்பயனாகக் கருதும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் பெற்று ஈடேற்றம் பெற்றவனாவேன்.

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்"

வள்ளுவர் காட்டும் பெண்மைக் குணம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமீலிதா க்ஷமதிகம்ய முதா முகுந்தம்
    ஆனந்தகந்த மநிமேஷ மநங்க தந்த்ரம் |
ஆகேகரஸ்த்தித கநீநிகபக்ஷ்ம நேத்ரம்
    பூத்யை பவேத் மம புஜங்க ச' யாங்கநாயா: ||

மிகச்சிறந்த நீல மணியை இந்திர நீலம் என்பர். மோட்சத்தைத் தரும் சௌந்தரிய லக்குமிக்கு இந்திரை என்றும் பெயர். எனவே தான் "இந்திர நீலம் போன்ற எழிலார்ந்த நயனங் கொண்ட இந்திரை" என அன்னை அழைக்கப்படுகிறார். அவர் விழிகளில் நீல நிறம் இயற்கையானதா? அல்லது எம் பெருமானின் நீல வண்ணத்தின் பிரதிபலிப்பா? கிரேக்கப் பெண்மணி களின் விழிகள் நீல நிறமானவை எனக் கூறுகிறார்கள். அன்னைக்கும் இவ்விதம் நீல நிற விழிகள் அமைந்திருப்பதில் ஐயமில்லை. அந்த நல்விழிகளால் - எம்பிரானை அன்னை அடிக்கடி நோக்கி அவரை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்துகிறார்.

அன்னையின் அந்த விழிகளின் எழிற்பார்வை (அவர் அடியான் ஆகிய) என்மேல்; ஓர் நொடிப்போது விழுந்தாற் போதும். இந்திரப் பதவி மட்டுமா கிட்டும்? அதற்கு மேலுள்ள வைகுந்தப் பேறு - முத்திப்பேறு ஆகிய யாவுமல்லவா கிட்டும்.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (திருக்குறள் 25: 1)

பாஹ்வந்தரே மதுஜித: ச்'ரிதகௌஸ்துபே யா
    ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி |
காமப்ரதா பகவதோ(அ)பி கடாக்ஷமாலா
    கல்யாணமாவஹது மே கமலாலயாயா: ||

உலகம் நிலைத்திருப்பதற்கு ஆதாரமானவர் பரந்தாமன். அவர் மார்பைத் தஞ்சமாகக் கொண்டு திருமகள் அங்கே பள்ளி கொள்கிறார். அங்கே சும்மாவா இருக்கிறார்? விழிகளை இமையாது அடிக்கடி கடைக்கண்ணாற் பரந்தாமனை பார்த்துப் பார்த்துப் பரவசம் எய்துகிறார். அறிதுயில் புரியும் மாயனும் தேவிமேல் மோகங்கொள்கிறார். இருவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கிறார்கள். தேவி தன்னடியார்களுக்கு வாரி வாரி வழங்குகிறார். ஆகையால் குபேரச் செல்வமெல்லாம் பெற்று வாழ்வாங்கு வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான் கண் படின்" - (திருக்குறள் 22: 6)

காலாம்புதாளி லலிதோரஸி கைடபாரே:
தாத்ரே ஸ்ப்புரதி யா தடிதங்கநேவ |
மாது : ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி
பத்ராணி மே திச்'து பார்க்கவ நந்தநாயா :||

அரக்கர் மறம்புரிவர். பெருவலிவும் உடையவர் எம்பெருமான் மது என்னும் அரக்கனையும் வேறுபல அரக்கர்களையும் மற்போரிட்டுக் கொன்ற மகா மல்லர். அவருடைய நீலநிறமான மார்பிலே விளங்கும் கௌத்துவம் என்னும் நீலமணிபோல் ஒளிவீசும் அழகிய விழிகளை உடையவர் திருமகள். அவரின் விழிகளின் வீச்சினால் திருமால் மோகம் அடைகிறார். அரக்கர் பலரைவென்ற மாமல்லர் அன்னையின் சுழற்பார்வை பட்டுச் சிந்தை மயங்குகிறார். தேவியின் அருட்பார்வை தப்பித்தவறியேனும் அடியார் மேல் விழுந்தாற் போதும். அளவற்ற செல்வமும் சுகபோகங்களும் கிட்டும்.

"இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்" - (திருக்குறள் 27: 10)

ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதிநி மன்மதனே |
மய்யாபதேத் ததிஹ மந்தர மீக்ஷணார்த்தம்
மந்தாஸனம் ச மகராலய கன்யகாயா: ||

மது என்னும் அரக்கனின் தம்பி கைடபன். திருமால் அவனையும் மற்போரிட்டுக் கொன்றவர். அந்தமாயனின் மார்பு. நீலமுகில்போற் பரந்து காட்சியளிக்கிறது. மழைக்காலத்தில் மேகத்தில் இடையிடையே மின்னல் தோன்றுவது இயல்பு. ஆனால் மஞ்சுபோல் நெஞ்சத்தில் இடைவிடாது ஒளிவீசும் மின்னற்கொடி ஒன்று காட்சியளிக்கிறது. அந்த மின்னற் கொடி வேறுயாதுமல்ல. பெருமகனான பிருகுமுனிவரின் வமிசத்தில் அவதாரம் செய்ததால்; பெருமைபெற்ற திருமகளேதான், அவரது செம்பஞ்சு போன்ற மலர்ப்பாதங்களைத் தஞ்சமாகப் பிடித்தவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் சித்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பினோர் கெடுவதில்லை. நான்கு மறை தீர்ப்பு
அம்பிகையைக் சரணடைந்தால் அநேகவரம் பெறலாம்"
- பாரதியார்

விச்'வாமரேந்த்ர பத விப்ரம தான தக்ஷம்
ஆநந்தஹேது ரதிகம் முரவித்விஷோ(அ)பி |
ஈஷன் நீஷீதது மயி க்ஷண மீக்ஷணார்த்தம்
இந்தீவரோதர ஸஹோதர மிந்திராயா ||

"யாருக்கு அகங்காரம் இல்லையோ யாருடைய புத்தி பற்றற்
றதோ அவன் இவ்வுலகத்தாரைக் கொன்றாலும் கொன்றவனா
கான் அவன் வினையினால் பந்தப்படாதவனே"
- பகவத்கீதை 18: 17

திருமால் மது முதலிய பல அரக்கரைக் கொன்றவர். ஆயினும் அவர் அந்தக் கொலைப் பாபங்களால் கட்டுண்ணாதவர். அது அவரது குல தர்மம். இவ்வாறே தன் தந்தையின் தாள்களைத் துண்டித்த வியாசசருமர் பித்துருகத்தி குருகத்தி பிரம்மகத்தி முதலிய கொடிய பாபங்களிலிருந்து விடுபட்டுச் சண்டேசுரப் பதவியும் பெற்றார். எனவே தான் திருமால் மங்கலங்கள் யாவற்றிற்கும் இருப்பிடமானவராகிறார். அவர் பாற்கடலில் உதித்த திருமகளின் மோகாஸ்திரத்துக்கு ஆட்பட்டவராயிருக்கிறார். தேன்பொருந்தியதும் - வாசனை வீசுவதுமான ஐவகை மலர்பாணங்களை உடையவன் மன்மதன். அவன் திருமாலின் மானச புத்திரன். தன் தந்தையான திருமாலுக்கே மோகம் உண்டாக அவன் தாய் அவனுக்குத் துணையாக இருப்பதால் காரியம் இலகுவாய் நிறைவேறி விட்டது. (முன்னர்ச் சிவனிடம் அவன்பட்ட பாட்டை மறக்கவில்லை) ஆளையே பார்க்காமல் அனைவருக்கும் காதல் மயக்கம் உண்டாக்குவது அவன் குலத்தொழில் ஆதலால் அவன் வினையினால் பந்தப்படாதவன்.

தாமரை மலரில் வீற்றிருக்குந் திருமகளின் அருட்பார்வையால்; அடியேன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று உய்திபெறுவேன்.

இஷ்டாவிசி'ஷ்டமதயோபி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப கதம் ஸு॰லபம் லபந்தே |
த்ருஷ்டி: ப்ருஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ் மம புஷ்கர விஷ்டராயா: ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் விழிகள் அம்பு நுனிபோல் மிகவும் கூர்மையானவை. அவர் விழிகளில் அருள்வெள்ளம் பெருக்கெடுத்திருக்கிறது. அதனால் அவை கார்மேகங்கள் போற் காட்சியளிக்கின்றன. கார்மேகங்களில் இலேசான குளிர்காற்றுப்பட்டவுடன் அவை பெருமழையைச் சொரிகின்றன. அவரடியாரின் சிறிய வேண்டுதலோ துதியோ தேவியின் கருணை மழையைப் பொழிய வைத்துவிடும். அத்தகைய இரக்க சுபாவம் பொருந்தியவர் திருமகள். அவர் தனதடியாரின் பாபபுண்ணியங்களைச் சீர்தூக்கிப்பாராமலே பெருஞ் செல்வத்தை வாரி வாரி வழங்குவார். அவர் பார்வை மழை அவரடியார்களின் கொடிய வறுமையைப் போக்கி உய்வளிக்குஞ் சக்தி வாய்ந்தது. அதனால் அவர்கள் பெரும்பேறு பெற்றவராகிறார்கள்.

"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு" (திருக்குறள் 23: 4)

*தத்யாத் தயானுபவனோ த்ரவிணாம்பு தாராம்*
*அஸ்மின்நகிஞ்சன விஹங்கசி'செளவிஷண்ணே |*
*துஷ்கர்மகர்ம மபநீய சிராய தூரம்*
*நாராயண ப்ரணயினீ நயனாம்புவாஹ: |*

"ஆயிரக்கணக்கான மனிதரில் யாரோ ஒருவன் மனநிறைவின் பொருட்டு முயலுகிறான். முயலுகின்ற பெருவாய்ப்புப் பெற்றிருப்பவரில்; யாரோ ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான். - கீதை 7: 3

பிரார்த்த கர்மம் (விதி) எப்படி அமைகிறதோ? அதற்கேற்பவே இலட்சத்திலொருவருக்கு ஆன்மிக நாட்டம் ஏற்படுகிறது. அப்படியான பலரில் எவரோ ஒருவர் முத்தியடையுந் தகுதியைப் பெறுகிறார். ஆனால் அடியாரின் உள்ளத்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளின் அருட்பார்வை கிட்டுமாயின்; கொடிய பாபியும் - தான் எண்ணியபடியே முத்தியை எய்துகிறான். இம்மை யிலும் சகல செளபாக்கியங்களையும் பெற்றவனாகிறான். அருளாளர் பெறும் பேறு பேசவும் வேண்டுமா?

"சிறப்மீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" - திருக்குறள் 4: 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தேவதேதி கருடத்வஜ ஸுந்தரீதி
சா'கம்பரீதி ச'சி'சேகர வல்லபேதி |
ஸ்ருஷ்டிஸ்த்திதி ப்ரளயகேளிஷு ஸம்ஸ்த்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவநைக குரோஸ்தருண்யை ||

படைத்தல் - காத்தல் - அழித்தல் என்பவற்றைச் செய்பவர்களின் சக்திகளாக கலைமகள் - அலைமகள் - மலைமகள் என்போர் இருக்கிறார்கள். அவர்கள் மூவருமாக அன்னை மகாலக்குமி; இராஜேஸ்வரியாகவும் விளங்குகிறார். அவர் கருடக் கொடியைத் தாங்குபவர். மனத்தால் தியானித்து - வாயால் துதி செய்து - உடலால் வணங்கி; முக்கரண சுத்தியுடன் வழிபாடு செய்வதால்; அன்னையின் அருள் மிக இலகுவிற்கிட்டும்.

"பக்தன் ஓரடி முன்வைத்தால் - பகவான் பத்தடி முன் வைக்கிறார்."
இராமகிருஷ்ண பரமகம்சர்

ச'ருத்யை நமோ(அ)ஸ்து சு'பகர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமோ(அ)ஸ்து சு'பகர்மபலப்ரதாயை |
ச'க்த்யை நமோ (அ)ஸ்து சதபத்ரநிகேதநாயை
புஷ்ட்யை நமோ (அ)ஸ்து புருஷோத்தம வல்லபாயை ||

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" - திருக்குறள் 1: 5

பதினோராம் பாடல் தொடக்கம் பதினைந்தாம் பாடல்வரை அன்னையின் துதி இடம் பெறுகிறது. தினமும் இந்த ஐந்து பாடல்களையேனும் பாராயணஞ் செய்து வரின் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். வாழ்வும் வளம் பெறும்.

வேதங்கள் மேலாக விதந்து கூறும் பரம் பொருளே வணக்கம். நல் வினைப் பயன்களை உடனுக்குடன் வழங்குபவரே வணக்கம் பராசக்தியாக விளங்கும் அழகிய தேவியே வணக்கம்

மேலான குணங்கள் பொருந்திய அன்னையே வணக்கம்
மகாவிஷ்ணுவின் தேவியாகி உள்ளத் தாமரையிலிருக்கும் ஞானியே
வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமோ(அ)ஸ்து நாளீக நிபாநநாயை
நமோ (அ)ஸ்து துக்தோததி ஜன்மபூம்யை |
நமோ (அ)ஸ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோ (அ)ஸ்து நாராயண வல்லபாயை ||

அப்பொழுது மலர்ந்த தாமரை மலர்போல் முகமுடையதேவியே வணக்கம் திருப்பாற்கடலில் உதித்த மேலான பரம்பொருளே வணக்கம் பாற்கடலில் தோன்றிய சந்திரன் - அமுதம் என்பவரின் சகோதரியே வணக்கம்

பாற்கடலில் பள்ளிகொள்ளும் நாராயணமூர்த்தியின் இதயத்திருப்பவரே வணக்கம்

நமோ(அ)ஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோ(அ)ஸ்து பூமண்டலநாயிகாயை |
நமோ (அ)ஸ்து தேவாதிதயாபராயை
நமோ (அ)ஸ்து சா'ர்ங்காயுத வல்லபாயை ||

இருகரங்களில் தாமரைப்பூக்களை ஏந்தித் தாமரையில் வீற்றிருக்கும் தேவியே வணக்கம்

மேல் கீழ் உலகம் பதினான்கிற்கும் தலைவியாய் இருப்பவரே வணக்கம்

தேவர் முதல் சிற்றுயிர் ஈறாகவுள்ள அனைத்துயிரையும் காப்பவரே வணக்கம்

சார்ங்கம் என்னும் வில்லேந்திய திருமாலின் ஆற்றலைப் பெற்றவரே வணக்கம்

நமோ (அ)ஸ்து தேவ்யை ப்ருகுநந்தநாயை
நமோ (அ)ஸ்து விஷ்ணோருரஸி ஸ்த்திதாயை |
நமோ (அ)ஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோ (அ)ஸ்து தாமோதர வல்லபாயை ||

பிருகு முனிவரின் வழித்தோன்றிய அன்னையே வணக்கம்

திருமாலின் காத்தல் தொழிலுக்கு வேண்டிய ஆற்றலை வழங்குபவரே வணக்கம்

வாசனைவீசுந் தாமரைமலரில் வீற்றிருக்கும் மகாலக்குமியே வணக்கம் திருமாலின் உள்ளத்தை மகிழ்விக்கும் தேவியே வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமோ (அ)ஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோ (அ)ஸ்து பூத்யை புவனப்ரஸூத்யை
நமோ (அ)ஸ்து தேவாதிபிரர்ச்சிதாயை
நமோ (அ)ஸ்து நந்தாத்மஜ வல்லபாயை ||

ஒளிவீசும் திருமேனியைத் தாங்கிய தேவியே வணக்கம்
தாமரைமலர்போல் மலர்ந்த முகமுள்ள திருமகளே வணக்கம்
சகல மங்கலங்களுக்கும் இருப்பிடமானவரே வணக்கம்
சர்வ உலகங்களின் இயக்கத்துக்கும் ஆதாரமானவரே வணக்கம்
அனந்தன் மேல் அறிதுயில் புரியும் திருமாலின் தேவியே வணக்கம்

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநானி
ஸாம்ராஜ்யதாத விபவாநி ஸரோருஹாக்ஷி
த்வத்வந்தநாதி துரிதா ஹரணோத்யதானி
மாமேவ மாதரநிசம் கலயந்து மான்யே ||

தேவர், கந்தருவர், வசுக்கள், சாத்தியர், மருத்துக்கள், மகாரிஷிகள், சித்தர், யச்ஷிர், இராக்கதர், மனிதர், விலங்குகள், தாவரங்கள் ஆகிய பல்வேறு வகையான உயிர்களையும் காப்பவர் திருமகள். அவர்கள் யாவரும் தேவியை நம்பிக்கையுடன் போற்றித் துதிக்கிறார்கள். நல்வழியிற் கிட்டும் சகல விதமான பணம் - பண்டங்களையும் பதவிகளையும் தன்பக்தர்களுக்குச் சித்திக்கச் செய்கிறார். அவர்களின் தீவினைகள் யாவற்றையும் நீக்குகிறார். பஞ்சேந்திரியங்கள் மூலம் கிட்டும் இன்பங்களையும் ஞானத்தையும் அடையச் செய்கிறார். தாமரை மலர் போன்று மலர்ந்த விழிகளையுடைய தேவியே என்னை ஆதரித்துக் காக்க வேண்டும்.

ஏனைய தேவர்களைக் காட்டிலும் திருமகள் மிக இலகுவில் பக்தி வலையில் அகப்படும் இயல்புள்ளவர். அதனால் யாவரும் அவரை நம்பி வழிபடுகிறார்கள். திருமகளை நினையாத மனித உள்ளம் இல்லையெனச் சொல்லாம் "காசேதான் கடவுளப்பா" என்பது படப்பாட்டு பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பது பழமொழி. மகாலக்குமியின் மூர்த்தங்களான அட்டலக்குமி களையும் அந்தந்தப் பயன் வேண்டி வழிபாடு செய்தல் வேண்டும். தனலக்குமியை வழிபட்டால் செல்வஞ்சேரும் வித்தியாலக்குமியை வழிபட்டால் வித்தை சேரும். இராஜலக்குமியை வழிபட்டால் பட்டம் பதவி சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தானலக்குமியை வழிபட்டால் புத்திர பாக்கியம் கிட்டும். போட்டிகளில் வெற்றி பெற விஜயலக்குமியை ஆராதிக்க வேண்டும். சௌந்தரியலக்குமியை வழிபடுவதால் பேரழகும் முத்திப்பேறும் சித்திக்கும். இவ்வளவுக்கும் அன்னை தம்மடியாரிடம் பிரதி பலன் எதிர்பார்ப்பதில்லை. அடியாரின் அன்பு, நம்பிக்கை, பக்தி இவற்றையே தகுதியாகக் கொண்டு அதற்கேற்றபடி வாரிவாரி வழங்குகிறார். கொடுத்துக் கொடுத்து மகிழ்வார் அவர்.

*யத்கடாக்ஷ ஸமுபாஸநாவிதி:*
*ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத: |*
*ஸந்தனோதி வசனாங்க மானஸை:*
*த்வாம் முராரி ஹ்ருதயெச்'வரீம் பஜே |*

யார் எனக்கு இலை, மலர், கனி, நீர் என்பவற்றைப் பக்தியுடன் படைகிறாரோ? நான் அவற்றை இன்புடன் அருந்துகிறேன்.

பகவத்கீதை 9: 26

திருமாலின் உயிருக்குயிராயிருப்பவர் திருமகள். அவர் திருமாலின் இதயத்தை விட்டு என்றும் பிரியாதவர். அன்னையின் கருணாகடாச்சத்தைப் பெறுவதற்காக அவர் அடியார்கள் நித்தியம் காத்திருக்கிறார்கள். மனதால் தியானிக்கிறார்கள். அவரவர் நாடிய பலன்களையெல்லாம் வழங்கும் வல்லமை படைத்தவர் மகாலக்குமி. ஆதலால் மனம் - வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களாலும் எந்த நாளும் நான் அவரை வழிபாடு செய்கிறேன். அவர் சகல சௌபாக்கியங்களையும் எனக்கு வழங்குவார்.

ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே
தவல தமாம்ஸுக கந்தமால்யசோ'பே |
பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே
த்ரிபுவனபூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||

தாமரை ஆசனத்திலிருந்து - தாமரைப் பூக்களை கரத்தில் ஏந்தி வெண்பட்டாடை அணிந்து - வெள்ளை மல்லிகைப் பூமாலை சூடி, வெண்ணிறச்சங்கை கையில் ஏந்திய திருமாலின் அன்புக்கு ஆட்பட்டு சர்வகலைகளும் உணர்ந்த மெஞ்ஞானியாக விளங்குந் திருமகள். சகல உயிரினங்களினதும் தேவைகளை உணர்ந்து - தேவைப்படும் யாவற்றையும் வாரி வழங்குகிறார். தாயே சிறியேனாகிய நின்னடியானுக்கும் இரங்கி அருள் புரிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தமாய் தேனினைச் சொரிந்து என மாணிக்க வாசகப் பெருமான் சிவபெருமானிடம் வேண்டுவது போல் ஆதிசங்கரரும் திருமகளிடம் உரிமையுடன் வேண்டுதல் செய்கிறார். இங்கே கலைமகளின் அம்சமாகக் காட்சி தருகிறார்.

திக்கஸ்திபி: கனககும்ப முகாவஸ்ருஷ்ட
ஸ்வர்வாஹி விமலாசாருஜலப்லுதாங்கீம் |
ப்ரதர்நமாமி ஜகதாம் ஜனனீ மசே'ஷ
லோகாதிநாத க்ருஹிணீ மம்ருதாப்தி புத்ரீம் ||

திக்குயானைகள் எட்டும் அதிகாலையில் புண்ணிய நதிகளின் தீர்த்தங் களைப் பொற்கலசங்களில் ஏந்தி வந்து அன்னைக்கு நீராட்டுகின்றன. இயல்பாகவே புனிதம் பொருந்திய அன்னை; மென்மேலும் புனிதம் பெற்று மேனியெங்கும் ஒளி வீச - உலகநாயகனாகிய திருமாலின் துணைவியாக விளங்குகிறார். அவர் கடலரசனாகிய வருணனின் செல்வப் புதல்வியாவார். பொழுது விடிவதற்கு முன்னரே - வைகறை வேளையில் அவரை வணங்கு கின்றேன். இங்கே கஜலக்குமி மூர்த்தத்தில் மகாலக்குமி போற்றப்படுகிறார். யானைகள், தங்கக் கலசம், கங்கா தீர்த்தம் ஆகிய யாவும் மங்கலகரமானவை அழகுக்கழகு செய்வதாகத் திருமஞ்சனம் விளங்குகிறது.

அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பகந்தம், சார்வபௌமம், சுப்பிர தீபம் என்பன அட்டதிக்கு யானைகள். இவை கிழக்கில் தொடங்கி முறையே வலமாக எட்டுத்திக்குக்களையும் காவல் புரிகின்றன என்பது ஐதிகம். கங்கை, யமுனை, சரசுவதி தருமதை, கோதாவரி, காவேரி குமரி, சிந்து, தாமிரபரணி, துங்கபத்திரை, கிருஷ்ணை என்னும் பதினான்கும் புண்ணிய தீர்த்தங்களாகும்.

கமலே கமலாக்ஷவல்லபே த்வம்
கருணாபூர தரங்கிதை ரபாங்கை: |
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம் தயாயா: ||

தாமரைப்பூப்போல் மலர்ந்த செங்கண்களை உடைய திருமாலின் தேவியே! சிவந்த தாமரை மலரில் வீற்றிருப்பவரே! கடலாற்சூழப்பட்ட இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியிலே; மிகவும் வறுமைப்பட்டவன் நானே. காமக்கடவுளான மன்மதனின் தாயே! உனது கருணையைப் பெறுவதற்கு உரிமை பூண்டோர் வரிசையிலே; முதலாளாக இருப்பவன் நானேயாவேன். கால தாமதஞ்செய்யாமல் என்மேற் கடைக்கண் பார்த்து அருள்புரிவீர் அன்னையே!

கியூவரிசையில் முதலிடத்தில் இருந்தும்; நொடிப்பொழுது தானும் சுணங்குவது பகவான் ஆதிசங்கரரருக்குப் பொறுக்கமுடியாததாகிறது. அதனால் துரிதப்படுத்துகிறார். உடனே பொன்மாரி பொழிகிறது. ஏழைப் பிராமணரின் வாழ்வு மலர்கிறது.

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு" (திருக்குறள் 76: 7)

ஸ்துவந்தி யே ஸ்துதிபி ரமீபி ரன்வஹம்
த்ரயீமயீம் த்ரிபுவனமாதரம் ரமாம் |
குணாதிகா குருதர பாக்யபாகின:
பவந்தி தே புவி புதபாவிதாச'யா: ||

நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐந்தும் மகாபூதங்களாகும். அண்டசராசரங்கள் அனைத்தும் இவற்றின் பல்வேறுபட்ட சேர்க்கைகளால் அமைந்தவை. இந்தப் புவனங்கள் அனைத்தும் மகாலக்குமியின் ஆற்றலால் உண்டானவை. ஆகையால் இவற்றின் அன்னையாக நாதப் பிரம்மமாக இருக்கிறார். அவரோ பேரெழில் வாய்ந்தவர். தினமும் அவர் பாதத்தைத் தஞ்சமாகப் பற்றிப் பிடித்து பணிந்து இப்பிரபந்தத்திலுள்ள பாடல்களைப் பாடித்துதித்தால் - நற்குணங்கள் உண்டாகும். சகல மங்களங்களும் பெருகும்; மெஞ்ஞானம் ஏற்படும்; முத்தியும் சித்திக்கும்.

"எய்தி வழிபடில் எய்தா தனவில்லை
எய்தி வழிபடில் இந்திரச் செல்வமும்
எய்தி வழிபடில் எண்சித்தி யுண்டாம்
எய்தி வழிபடில் எய்திடும் முத்தியே" - திருமந்திரம் 1006

அவரவர் தத்தங் குலதெய்வத்தைப் பூரண நம்பிக்கையுடன் வழிபாடு செய்தால் எண்ணிய யாவுங் கைகூடும். புருடார்த்தங்கள் நான்குஞ் சித்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்



1) கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிற்றனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறுமுருகனை
அக்கண மணமருள் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

3) துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ்ப்பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

4) கருப்பத் தூறிப் பிறவாதே
கணக்கற் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரிசனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே

6) அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாளே
உனை நானினைந்தருட் பெறுவேனே
இபமா முகன்தனைக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

7) பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தி சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மா மணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தரநுபூதி

### காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்

### நூல்

1. ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைக்கோ தரனே

2. உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப வினோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே

3. வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே

4. வளைபட்டகைம் மாதொரு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங் குவதே

6. திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்பு மதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயா பரனே

7. கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

8. அமரும் பதிகே ளகமா மெனுமில்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே

9. மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே

10. கர்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே

11. கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகா மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே

13. முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள் கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

14. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுயவாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவா வினையே.

15. முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

16. பேராசை யெனும் பிணியிற் பிணிபட
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே.

17. யாமோதிய கல்வியு மெம் மறிவுந்
தாமே பெற வேலவா தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீ ரினியே.

18. உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே

20. அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளி மையோர்
புரிதா ரக நாத புரந்தரனே

21. கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே

22. காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுரபூபதி மேரு வையே

23. அடிமைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

24. கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடுகுன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே.

25. மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலேறிய சேவகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோ தமனோ
தீதா சுரலோக சிகா மணியே

27. மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயி லேறிய வானவனே

28. ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே

29. இல்லே யெனுமா யையி லிட்டனை நீ
பொல்லே னறியாமை பொறுத் திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே

30. செல்வா னுருவிற் றிகழ்வே லவன்
றொவ்வா தெென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே

31. பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே

32. கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே

34. சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்கராம சிகா வலசண் முகனே
கங்கா நதி பால கிருபா கரனே

35. விதிகாணு முடம்பை விடா வினையென்
கதிகாண மலர்க்கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா கரபூ பதியே

36. நாதாகுமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே

37. கிரிவாய் விடுவிக் ரம வேலிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந் தையையோ.

38. ஆதாளியை யொன் றறியே னையறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராதகுலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே.

39. மாவேழ் சன்னங் கெடமா யைவிடா
மூவேடனை யென்று முடித்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவ சங்கர தேசிகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கி டவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந் தவனே.

41. சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னோபதே சிகனே

42. குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்ந்திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையு மற்றதுவே

43. தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந் ததுவே.

44. சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும் வெங்
காடும் புனமுங் கமழும் கழலே.

45. கரவா கியகல்வி யுளரா கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே

46. எந்தாயுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தனவே.

48. அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென்றவ ரோடுறும் வேலவனே

49. தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் கிருபைசூழ் சுடரே.

50. மதிகெட்டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவவே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

51. உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் யருள்வாய் குகனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகழிக்கூத்தர் அருளிய
# திருப்புகழ்

ஓராறு முகமாட ஈராறு புசமாட
ஓங்கு வடிவேலுமாட
உச்சிதக் குண்டலமும் கச்சிதமுடியாட
ஒளிவான சுட்டியாட
பாரான தண்டையும் பாதச்சிலம்பாடப்
பணிந்திடும் பக்தர் ஆட
பன்னிரு கரமாட பணிந்த பூஷணமாடப்
பவளவெண் குடைகள் ஆட
தோராத மயிலாடக் கோழிக் கவசமாடத்
துலங்கு நீர் காவியாட
தொண்டர்கள் முதலான சண்டி கேஸ்வரராடத்
தொந்த நவவீரர் ஆட
தாராத தவமுனிவர் தானாட நீயாடித்
தமியனேன் முன்பு வருவாய்
தகதகென மயிலேறித் திருநடன மாடிவரும்
தணிகாசலக் கடவுளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் பெற்ற புராதன சிவாலயங்கள்



திருக்கோணேஸ்வரம்
(திருகோணமலை)



திருக்கேதீஸ்வரம்
(மன்னார்)

## புராதன சிவாலயங்கள்



நகுலேஸ்வரம்
(கீரிமலை, யாழ்ப்பாணம்)



முன்னேஸ்வரம்
(சிலாபம்)



காலனுக்கு விடை கொடுத்த விடை



சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். 0776687443

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org